**04.06.2025**

**STC 251/2024**

**PW.1. THUFILAPARVEEN W/O. ASHLAMBASHA.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு அவரது குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

**குறுக்கு விசாரணை:**

1. எனக்கும், எனது கணவருக்கும் திருமணம் முடிந்து 7 மாதங்கள் ஒன்றாக குடும்பம் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். எனக்கும், எனது மாமியாருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் திருமணம் முடிந்து 3 மாதம் கழித்து எனது கணவர் எனது அம்மா வீட்டிற்கு வீட்டோட மாப்பிள்ளையாக வந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் தான் எனது கணவர் எனது அம்மா வீட்டிற்கு வீட்டோட மாப்பிள்ளையாக வந்தார் என்றாலும், நானும், எனது அம்மாவும் அவரை கொடுமை செய்தோம் என்றால் சரியல்ல. மேலே சொல்லியுள்ளது போல் எதிரி என்னை கொடுமைப்படுத்தியாக சொல்லி உள்ள நிலையில் திருமணம் முடிந்து எத்தனை மாதத்திற்குள் நான் கர்பம் தரித்தேன் என்றால் 1 3/4 மாதத்தில் கர்பம் தரித்தேன். நானும், எனது கணவரும் எனது அம்மா வீட்டில் இருந்த போது அவர் என்ன வேலை செய்து கொண்டு இருந்தார் என்றால் சென்னையில் உள்ள ஓட்டலில் வேலை செய்து கொண்டு இருந்தார். மேற்படி எனது கணவர் சென்னையில் உள்ள ஓட்டலில் வேலை செய்து கொண்டிருந்த காரணத்தினால் விடுமுறை நாட்களில் மட்டும் வீட்டிற்கு வருவார் என்றால் சரிதான்.

2. எனது கணவர் விடுமுறைக்கு வரும் நாட்களில் அவர் வாங்கி வரும் சம்பளம் போதவில்லை என்ற காரணம் சொல்லி அவரை நானும், எனது அம்மாவும் கொடுமை செய்தோம் என்றால் சரியல்ல. நான் 7 மாதம் கர்பமாக இருந்த போது எனது கணவர் எனது அம்மா வீட்டில் இருந்து சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. குழந்தை பிறக்கும் வரை எனது அம்மா வீட்டில் தான் இருந்தார். குழந்தை பிறந்த பிறகு தான் எனது கணவர் வீட்டில் இருந்து சென்றார் என்று சொல்வது பொய் என்றாலும், எனது மகனை தற்பொழுது தான் எதிரி முதல் முறையாக நீதிமன்றத்தில் வைத்து பார்க்கிறார் என்றாலும் சரியல்ல. 2வது குழந்தைக்கு 3 மாதம் கர்பமாக இருக்கும் வரை எனது கணவர் எனது அம்மா வீட்டில் தான் இருந்தார். நானும், எனது கணவரும் கடந்த 8 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம் என்றால் சரிதான். நான் இரண்டாவது குழந்தை பிறந்ததற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால் 1வது குழந்தை பிறந்ததுக்கும் எனது கணவர் வரவில்லை, இரண்டாவது குழந்தை இறந்ததற்கும் எனது கணவர் வரவில்லை.

3. எனக்கு இரண்டாவது குழந்தை பிறந்து இறந்த விவரத்த தற்பொழுது தான் முதல் முறையாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக நான் புகாரை வேலூர் SP அலுவலகத்தில் கொடுத்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவை யார்

எழுதினார்கள் என்றால் எனது மாமா மகன் எழுதினார். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள விவரங்களை எனக்க தெரியுமா என்றால் நான் சொல்லி தான் எனது மாமா மகன் எழுதினார். புகார் மனுவில் எனக்கு இரண்டாவது குழந்தை பிறந்த விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. வேலூர் SP அலுவலகத்தில் நான் கொடுத்த புகாரை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுக்க சொல்லி என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. புகார் மனுவில் தேதி, செல்போன் நம்பர் நீல நிறத்தில் உள்ளது என்றாலும் புகார் மனு கருப்பு நிறத்தில் உள்ளது என்றாலும் சரிதான். புகாரை வேலூர் SP அலுவலகத்தில் அளித்ததற்கான எந்த மேற்குறிப்பும் புகார் மனுவில் குறிப்பிடாத காரணத்தினால் வேலூர் SP அலுவலகத்தில் கொடுத்த புகார் மனு தற்பொழுது காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் மனு இல்லை என்றால் அது குறித்த விவரம் எனக்கு தெரியாது. உண்மையில் புகாரை வேலூர் SP அலுவலகத்தில் கொடுத்து இருந்தால் புகார் மனுவில் மேற்குறிப்பு வைத்து தான் அனுப்பி இருப்பார்கள் என்றால் காவல்நிலையத்தில் என்ன செய்வார்கள் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. காவல்நிலையத்தில் எனக்கு தெரிந்தும், தெரியாமலும் நிறைய விஷயங்கள் நடக்கிறது. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் மனு வேலூர் SP அலுவலகத்தில் எந்த மேற்குறிப்பும் இல்லாத நிலையில் இந்த புகார் மனுவை நானும், போலீசாரும் சேர்ந்து தயார் செய்தது என்றால் சரியல்ல. பேர்ணாம்பட்டு காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் கொடுத்து இருக்கிறேன். பேர்ணாம்பட்டு காவல்நிலையத்தில் புகார் அளித்ததற்கான மனுவின் நகலையோ அல்லது வேறு ஆதாரங்களையோ வேலூர் SP அலுவலகத்தில் அளித்த புகார் மனுவில் சேர்த்து இருக்கிறேனா என்றால் இல்லை.

5. அ.சா.ஆ.1 புகார் மனுவில் 25.07.2023ம் தேதி எதிரி குழந்தையை கடத்திவிடுவதாக என்னை வந்து மிரட்டிய விவரங்களை சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். புகாரில் நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் புகார் அளித்த 2 நாட்களில் விசாரணை செய்தார்கள். வேலூர் SP அலுவலகத்தில் புகார் அளித்ததிற்கு ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். வேலூர் SP அலுவலகத்தில் அளித்த ரசீதை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என்னை விசாரணை செய்த போது கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். அனைத்து மகளிர் போலீசார் என்னை விசாரணை செய்த போது வேலூர் SP அலுவலகத்தில் அளித்த புகார் குறித்து சொன்னேனா என்றால் சொன்னேன். அ.சா.ஆ.1 புகார் மனுவில் வேலூர் SP அலுவலகத்தில் கொடுத்த புகார் குறித்து சொல்லிவில்லை என்றாலும், குழந்தையை கடத்துவதாக மிரட்டிய தேதி குறித்து சொல்லிவில்லை என்றாலும் சொல்லி உள்ளேன். அ.சா.ஆ.1 புகார் மனுவை எழுதியவர் பர்வேஸ் ஆவார். மேற்படி பர்வேஸ் என்பவரை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் அவருக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்பதால் அவரை விசாரிக்கவில்லை.

6. உண்மையிலேயே அ.சா.ஆ.1 புகார் மனுவை எனது மாமா மகன் எழுதி இருந்தால் போலீசாரிடம் மேற்படி விவரத்தை சொல்லி இருப்பேன் என்றாலும், போலீசார் அவரை விசாரித்து இருப்பார்கள் என்றாலும், சரியல்ல. எதிரி சென்னையில் வேலை செய்து வருவதால் அவர் மீது காழ்புணர்ச்சி காரணமாக பழி வாங்கும் எண்ணத்தில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றாலும், எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ள படி எதிரி குழந்தையை கடத்துவதாக மிரட்டினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

**04.06.2025**

**STC 251/2024**

**PW.2. YASMEEN W/O. MANSUR AHAMAD.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு அவரது குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

**குறுக்கு விசாரணை:**

1. எனது மகள் திருமணம் முடிந்து 3 மாதங்கள் மட்டும் அவரது கணவர் வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. 6 மாதம் அவரது கணவர் வீட்டில் இருந்தார். திருமணம் முடிந்து 6 மாதங்களுக்கு பிறகு எனது மகளின் கணவர் எங்கள் வீட்டில் வீட்டோட மாப்பிள்ளையாக வந்து இருந்தார் என்றால் சரிதான். ஜமாதில் சொல்லியதின் பேரில் எங்க வீட்டில் வந்து இருந்தார். எனது மகள் உடன் சேர்ந்து வாழும் எண்ணத்தில் தான் அவரது கணவர் எங்கள் வீட்டில் வந்து இருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது மகளின் கணவர் சென்னையில் ஓட்டலில் வேலை செய்து கொண்டு இருந்தார் சரிதான். அவ்வாறு சென்னையில் வேலை பார்க்கும் போது விடுமுறையில் எங்கள் வீட்டிற்கு வருவார் என்றால் சரிதான். சென்னையில் வேலை பார்க்கும் போது விடுமுறையில் எங்கள் வீட்டிற்கு வரும் போது சம்பள பணம் எங்களிடம் கொடுப்பார் என்றால் அவரது அம்மாவுக்கும், அக்காவிற்கும் தான் கொடுத்தார். எனது மகளின் கணவர் சென்னையில் வேலை பார்க்கும் போது விடுமுறையில் எங்கள் வீட்டிற்கு வரும் போது சம்பள பணம் எனது மகளிடம் கொடுப்பார் என்றால் அவரது அம்மாவுக்கும், அக்காவிற்கும் தான் கொடுப்பார் மற்றும் எனது மகளிடமும் செலவிற்கு கொடுப்பார்.

2. எனது மகளின் கணவர் கொடுக்கும் சம்பள பணம் போதாத காரணத்தினால் நானும், எனது மகள், எனது கணவரும் அவரை கொடுமை செய்தோம் என்றால் சரியல்ல. எனது மகள் 7 மாதம் கர்பமாக இருக்கும் போது எனது மகளின் கணவரை அடித்து கொடுமைபடுத்தி வீட்டில் இருந்து துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல. புகாரை எனது மகள் எங்கு கொடுத்தார் என்றால் வேலூர் SP அலுவலகத்தில் கொடுத்தார். புகாரை எனது மகள் எப்போது கொடுத்தார் என்றால் குழந்தை பிறந்த பிறகு கொடுத்தார். இந்த புகாரை யார் அளித்தார்கள் என்றால் நானும், எனது மகளும் சேர்ந்து தான் கொடுத்தோம். புகாரை வேலூர் SP ஆபீஸ் வெளியில் உள்ளவர் எழுதி கொடுத்தார்களா என்றால் வீட்டிலியே எழுதி எடுத்து சென்றோம். புகாரை வீட்டில் யார் எழுதினார்கள் என்றால் எனது உறவினர் எழுதினார். வேலூர் SP அலுவலகத்தில் புகார் அளித்து எத்தனை நாள்கள் கழித்து விசாரணை செய்தார்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. வேலூர் SP அலுவலகத்தில் புகார் அளித்து 2 மாதங்களில் விசாரணை செய்தார்களா என்றால் 2 மாதத்திற்குள் இருக்கும். வேலூர் SP அலுவலகத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை புகார் அளித்தோம்.

3. நான் சொல்வது போல் எனது மகளின் கணவர் எந்த தவறும் செய்யவில்லை என்றாலும், எனது மகள் 7 மாதம் கர்பமாக இருந்த போது நானும், எனது மகளும் சேர்ந்து கொடுமை செய்து அவரை வீட்டில் இருந்து துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல.எனது

மகள் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவில் 2வது குழந்தை பிறந்து இறந்த விவரத்தை சொல்லி உள்ளோம் என்றால் சொல்லி உள்ளோம். எனது மகளின் கணவர் எங்களின் குழந்தையை கடத்துவதாக மிரட்டவில்லை என்றால் சரியல்ல. எனது மகளின் கணவர் வீட்டை விட்டு சென்று 7 வருடம் இருக்கும் என்றால் சரிதான். நானும், எனது மகளும் சொல்வது போல் எனது மகளின் கணவர் குழந்தையை கடத்துவதாக மிரட்டவில்லை என்றால் அவர் மிரட்டவில்லை ஆட்களை வைத்து மிரட்டுகிறார்.

4. எனது மகளின் கணவர ஆட்களை வைத்து மிரட்டுகிறார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மகளின் கணவர ஆட்களை வைத்து மிரட்டுகிறார் என்று நான் சொல்வது உண்மையாக இருந்தால் யார் மிரட்டுகிறார் என்று குறிப்பிட்டு பேர்ணாம்பட்டு காவல்நிலையத்தில் புகார் அளித்து இருப்பேன் என்றால் புகார் அளித்தும் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யவில்லை. பேர்ணாம்பட்டு காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யவில்லை என்று வேலூர் SP அலுவலத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்து இருக்கிறோம். பேர்ணாம்பட்டு காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யாததால் வேலூர் SP அலுவலத்தில் கொடுத்த புகாரை அனைத்து மகளிர் கால்நிலைய ஆய்வாளர் விசாரணை செய்யும் போது கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. வேலூர் SP அலுவலத்தில் மட்டும் தான் கொடுத்தோம். நானும், எனது மகளும் சொல்வது போல் எதிரி குழந்தையை கடத்துவதாக மிரட்டுவதாக சொல்வது அவர் மீது காழ்புணர்ச்சி காரணமாக பழி வாங்கும் எண்ணத்தில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**Sd/–R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**